DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 10.09.2024.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.03/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.4 |
| Name | : | பர்வீன் குமார் |
| Father Name | : | பிரேம்குமார் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. Chandar Rao, Grade III Bench Clerk, of this court, on 10.09.2024. in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், கிளேசி புருக் எஸ்டேட்டில் மேற்பார்வையாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எதிரியும் எங்கள் எஸ்டேட்டில் வாட்ச்மேனாக வேலை செய்ததால் அவரை எனக்கு தெரியும். கடந்த 10.03.2024-ம் தேதி அன்று முழுவதும் அவர் தான் காவல் பணியில் இருந்தார். அன்று விடுமுறை தினம் என்பதால் எதிரி மட்டுமே பணியில் இருந்தார். மாலை சுமார் 05.00 மணிக்கு எஸ்டேட்டில் வேலை செய்யும் சங்கி மற்றும் சுர்ஜீத் ஆகிய வடமாநிலத்தை சேர்ந்தவர்கள் வந்து எஸ்டேட்டில் ஒரு மூட்டை மிளகு பறித்து மூட்டையில் யாரோ கட்டி வைத்து இருப்பதாக மேலாளரிடம் சொன்னார்கள். அடிக்கடி எஸ்டேட்டில் திருடு போவதால் மூட்டையை எடுப்பதற்காக திருடர்கள் வருவார்கள் என்பதால் என்னையும், சங்கி மற்றும் வாட்ச்மேனையும் காவலுக்கு மேலாளர் வரச்சொன்னார். இரவு 10.00 மணிக்கு இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி வேலி ஓரமாக பைக்கை நிறுத்திவிட்டு மிளகு மூட்டையை எடுத்துக்கொண்டு சிறிது துாரம் சென்றார். அருகில் சென்று மேலாளர் டார்ச் அடித்து மேலாளர் பார்த்தபோது கோவிந்தன் என தெரியவந்ததால் நீயாடா என கேட்டவுடன் அவர் மூட்டை போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார். வேலி மீது ஏறி கீழே குதித்தபோது முட்டியில் அடிப்பட்டதால் அவரால் ஓட முடியாமல் எங்களிடம் மாட்டிக்கொண்டார். தான் செய்தது தவறு என்றும், தன்னை மன்னித்து விடுமாறும் வெளியில் சொல்லவேண்டாம் என்று கெஞ்சினார். நடந்த விவரத்தை விசிடர் சுப்பிரமணியனுக்கு போன் மூலம் தகவல் மேலாளர் சொன்னார். அவரிடமும் தான் செய்தது தவறு மன்னித்து விடுங்கள் என எதிரி கெஞ்சினார். பிறகு சுப்பிரமணி காலையில் எதிரியை வந்து தன்னை பார்க்குமாறும் தற்போது அவரை விட்டுவிடுமாறும் சொன்னார். எதிரியை

அவரது வீட்டில் விட்டு விட்டார்கள். மறுநாள் காலை விசிடர் சுப்பிரமணி, கணேசன் மற்றும் மாது ஆகியோர் எஸ்டேட்டில் இருந்தபோது எதிரி வந்தார். சுப்பிரமணியும் கணேசனும் எதிரியிடம் விசாரணை செய்தார்கள். இதற்கு முன்பு தான் திருடிய 1 மூட்டை மிளகும், 3 மூட்டை காப்பியும் தன் வீட்டில் வைத்திருப்பதாகவும் அதை எடுத்து தருவதாக அவரது வீட்டிற்கு அழைத்துச்சென்றார். எதிரி வீட்டிலிருந்து 3 மூட்டை காப்பியும், 1 மூட்டை மிளகும் கொடுத்தார்கள். மறுநாள் 12-ம் தேதி காலையில் கோவிந்தசாமியின் அப்பாவும், மனைவியும் எஸ்டேட்டிற்கு வந்து எதிரி திருடிய காப்பியையும், மிளகையும் கொடுத்துவிட்டோம் எதற்காக ஊரில் அவர் திருடியதாக சொன்னீர்கள். எல்லோரும் கேட்கிறார்கள் எங்களுக்கு அசிங்கமாக உள்ளது என தகராறு செய்தார்கள். மேலாளர் உடனே விசிடர் சுப்பிரமணியத்திற்கு போன் செய்து சொன்னேன். அவர் சொன்னபடி மேலாளர் 13-ம் தேதி கோவிந்தசாமி மீது நடவடிக்கை எடுக்கும்மாறு ஏற்காடு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள் நான் நடந்த விவரம் சொன்னேன்.

**<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் முதலில் MSP விஜயன் ராஜேஸிடம் வேலையின் இருந்தேன் என்றால் சரிதான். துவாரகநாதன் இறந்த பிறகு அடிக்கடி திருட்டு சம்பவம் நடைபெற்றது என்றால் நான் கேள்விபட்டேன். எதிரி கோவிந்தன் எங்கள் எஸ்டேட்டில் ஒரு லேபராக வேலை பார்த்தார் என்றால் சரிதான். ஞாயிற்றுகிழமை தொழிலாளிகளுக்கு விடுமுறை என்றால் ஆமாம். ஆனால் பகலில் வாட்ச்மேன் இருப்பார்கள். எதிரிக்கு தோட்டம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. எஸ்டேட்டில் மிளகு மூட்டை இருந்ததை நாங்கள் எப்போது பார்த்தோம் என்றால் மாலை சுமார் 06.00 மணியிருக்கும். யார் மூட்டை இருப்பதாக சொன்னது என்றால் வடமாநிலத்தை சேர்ந்த சங்கி, சுர்ஜீ ஆகியோர்கள் ஆகும். மாலை 06.00 மணியிலிருந்து இரவு 10.00 மணிவரை நாங்கள் எஸ்டேட்டில் தான் காவலுக்கு இருந்தோமா என்றால் ஆமாம். 10-ம் தேதி எதிரி எப்போதும் எங்கள் எஸ்டேட்டில் வாட்ச்மேன் வேலை செய்தது இல்லை என்றால் சரியல்ல. அவர் வேலை செய்தார். நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. கீரைக்காடு பஸ் ஸ்டாப்பில் இருந்த எதிரியை சந்தேகத்தின் பேரில் எஸ்டேட்டிற்கு அழைத்துச்சென்று அவரை அடித்து துன்புறுத்தி அவரது வீட்டிலிருந்து மிளகு, காப்பி மூட்டைகளை எடுத்துச்சென்றுள்ளோம் என்றால் தவறு.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-. M. Jayanthi,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.